**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:8

| Name | S.Tamilselvan (PW8) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present. )*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1) நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சென்னிமலையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24.10.2021-ம் தேதியன்று சிவகிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் பெண் காவலர் செல்வி. அசரப்நிஷா த.கா.2199 என்பவரை அனுப்பி அங்கு வெண்ணிலா என்பவரின் விபத்து பதிவேடு பெற்று அவர் மேல்சிகிச்சைக்காக மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக தெரியவந்து பெண் தலைமைக் காவலர் அங்கு சென்று காயம்பட்ட வெண்ணிலா என்பவர் மயக்க நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்ததால் அவரது கணவர் சிவகிரி விளக்கேத்தியை சேர்ந்த செங்கோடன் மகன் ஆறுமுகம் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து என் பார்வைக்கு வைத்தார்.

2) நான் மேற்படி புகார் வாக்குமூலத்தினை கடந்த 25.10.2021ம் தேதி இரவு சுமார் 22.00 மணிக்கு பார்வையிட்டு நிலைய குற்ற எண்.198/2021 சட்ட பிரிவுகள் 279, 337ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் வாக்குமூலத்தினையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:46:06 +0530

3) பின்னர் 26.10.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சூர்யபிரகாஷ் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் ஆறுமுகம், பரமேஸ்வரன், பிராங்கிளின், தங்கவேல், சூர்யபிரகாஷ் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

4) விபத்தின்போது எதிரி அர்ஜுனன் ஓட்டி வந்த வாகனமான யமாஹா பேசினோ TN 86 C 9856 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளரின் தணிக்கைக்காக அனுப்பி வைத்தேன். சேலம் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த வெண்ணிலா 28.10.2021ம் தேதி பகல் 11.45 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் பேரில் வழக்கின் சட்டப் பிரிவுகளை இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) பின்னர் 28.10.2021ம் தேதி மாலை சுமார் 03.30 மணிக்கு சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சவகிடங்கில் வைக்கப்பட்டிருந்த வெண்ணிலா என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத விசாரணை சாட்சிகளான அருண்குமார், ஜெகநாதன், சரவணகுமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இத்துடன் எனது முதற்கட்ட புலன் விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் வசம் வழக்குக் கோப்பினை ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:46:12 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

**1)** விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு அரசு மருத்துவமனையில் இருந்து வந்த மெடிக்கல் இன்டிமேசனை முதல் தகவல் அறிக்கையுடன் சேர்த்து அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையை வெண்ணிலா இறந்தபின்னர் அவருடைய பிரேதத்தினை அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை நான் மேற்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை வெண்ணிலா இறப்பதற்கு முன்பே தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

2) என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள கையொப்பத்தின் கீழ் தேதி 24.10.2021 என உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயாரிக்கும்போது பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையானர்களின் வாக்குமூலங்கள் மற்றும் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துவிட்டேன் என்றால் சரிதான். சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே எதிரியை கைது செய்துவிட்டேன் என்றால் கைது செய்யவில்லை.

3) நான் தயார் செய்த சாட்சிகளின், வாக்குமூலங்கள் மற்றும் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், முதல் தகவல் அறிக்கை, சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை ஆகியவற்றை 09.12.2021ம் தேதியன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த உடனே சம்பவ இடத்திற்கு சென்று அடிபட்ட நபரை 108 ஆம்புலன்சிற்கு காவல் துறையினர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தில் வைத்து சம்பவம் குறித்து சாட்சி அ.சா.5 பிராங்கிளின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் HP பெட்ரோல் பங்க், வலசு மணி லேத் மற்றும் கடைகள் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

4) மேற்படி இடங்களில் வேலை செய்யும் நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. பெட்ரோல் பங்க் மற்றும் லேத் ஆகியே இடங்களில் வைத்திருக்கும் சி சி டி வி கேமராவை ஆய்வு செய்தேன் என்றால் செய்யவில்லை. வழக்கு சம்பவம் அ.சா.2 மைனர் வாகனத்தை ஓட்டி வந்து கவனக்குறைவாக ரோட்டை கடக்க முயற்சி செய்ததால்தான் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய் புகாரை விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்ற வழக்கு ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:46:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:9

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முருகன் (PW9) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present. )***

முதல் விசாரணை(அரசு தரப்பு):–

**1)** நான் தற்போது கோவை மாவட்டம் பொள்ளாச்சி நகர கிழக்கு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2021 வருடம் கொடுமுடி காவல்நிலையத்தில் காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 25.10.2021ம் தேதியன்று சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.தமிழ்செல்வன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.198/2021 ச/பி.279, 304( A) இதச வழக்கில் முதல் விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை சிவகிரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எனது வசம் ஒப்படைந்திருந்தார்.

2) நான் அதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 02.11.2021ம் தேதியன்று பகல் 11.30 மணியளவில் விசாரணைக்காக சிவகிரி காவல் நிலையம் ஆஜரான எதிரி அர்ஜுனனை கைது செய்து தக்க தனி நபர் ஜாமீனில் விடுவித்தேன். நான் சம்பவ இடம் சென்று பார்வையிட்டதில் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்செல்வன் தயார் செய்திருந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஒத்துப்போனதால் நான் தனியாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. உதவி ஆய்வாளர் திரு.தமிழ்செல்வன் விசாரித்த சாட்சிகளை நான் மேல்விசாரணை செய்ததில் அவர்கள் அனைவரும் உதவி ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலங்களை என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:46:29 +0530

3) விபத்தின்போது காயம்பட்ட சாட்சி அ.சா.2 பரமேஸ்வரன் ஓட்டி வந்த இருசக்கர வாகனமான TVS XL Super TN 33 AF 5431 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். விபத்தில் சம்மந்தப்பட்ட இரு வாகனங்களையும் தணிக்கை செய்த ஈரோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தை சேர்ந்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.கதிர்வேல் மற்றும் திரு.சிவக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாகனங்களின் தணிக்கை சான்றுகள் பெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மோட்டார் வாகன ஆய்வாளர் **திரு.கதிர்வேல் TN 86 C 9856 என்ற எண்ணுள்ள வாகனனத்திற்கு வழங்கிய தணிக்கை சான்று அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விபத்தில் இறந்தபோன வெண்ணிலா என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை சான்று வழங்கிய சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனையை சேர்ந்த மகேஷ்குமார் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அரசு தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 294(3)ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது)**. சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வெண்ணிலாவின் கணவர் அ.சா.1 ஆறுமுகத்திடம் இருந்த புகார் வாக்குமூலம் பெற்று வந்த நிலை பெண் காவலர் செல்வி. அசரப் நிஷா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனையின்போது வழிக்காவல் செய்த செல்வி.எஸ்.முத்துலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் கட்ட புலன் விசாரணை செய்த சிவகிரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.தமிழ்செல்வன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:46:35 +0530

**1)** இந்த வழக்கு விபத்தில் சம்மந்தப்பட்ட TVS XL Super TN 33 AF 5431 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கும்போது மேற்படி வாகனத்தின் பின்னால் பகுதியில் சேதாரம் எதுவும் இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. எதிரி ஓட்டி வந்த அதிவேகமாக வந்து அ.சா.2 ஓட்டி வந்த வாகனத்தின் பின் பகுதியில் மோதியதாக எனது குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.2 ஓட்டி வந்த வாகனம் யாருக்கு சொந்தமான என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

2) மேற்படி வாகனத்தின் ஆவணங்களை என்னிடம் ஒப்படைத்த பின்னர்தான் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். அ.சா.2ன் XL வாகனத்தின் உரிமையாளர் கதிர்வேல், த/பெ.பழனிச்சாமி, எழுமாத்தூர் என்ற விலாசத்தில் இருந்தது என்றால் சரிதான். அந்த நபரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. எனது ஆவணங்களின்படி அ.சா.2 பரமேஸ்வரனின் வயது 13 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பட்டியல் சாட்சிகளில் பரமேஸ்வரனின் வயது 16 என உள்ளது.

3) என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையில் சாட்சிகள் பட்டியலில் பரமேஸ்வரனின் வயது 13 என உள்ளது என்றால் சரிதான். கு.வி.மு.ச. பிரிவு 161ல் பரமேஸ்வரனின் வயது 13 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 13 வயது சிறுவனான அ.சா.2யை வாகனம் ஓட்ட அனுமதித்த வாகனத்தின் உரிமையாளர் மீது ஏதேனும் வழக்கு பதிந்துள்ளேனா என்றால் இல்லை. தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் முதல் விசாரணை செய்யாத கோப்புகளை பெற்று நான் தவறான குற்ற அறிக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சென்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். சம்பவம் குறித்து அக்கம் பக்கம் உள்ள கடைகள் மற்றும் பெட்ரோல் பங்கில் இருந்த நபர்களை விசாரித்தேனா என்றால் இல்லை. அங்கிருந்த சி.சி. டி வி கேமராவை ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால் தான் மேற்படி சி.சி.டி.வி கேமராவையும், சம்பவ

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:46:40 +0530

இடத்திற்கு அருகில் இருந்த கடைக்காரர்களையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 ன் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும்தான் வழக்கு விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:46:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.